- எக்காரணத்திற்காகவும் குழந்தையை இரவு நேரத்தில் காவல் நிலையத்தில் நிறுத்தி வைத்தல் கூடாது. (பிரிவு 24-4)
- குழந்தையின் விவர அறிக்கை அது கூறியவாறே பதிவுசெய்யப்பட வேண்டும். (பிரிவு 25-1)
- அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் முன்னிலையிலேயே பதிவு செய்யப்பட வேண்டும். (பிரிவு 26-1)
- தேவைப்படும்போது வல்லுனரின் உதவியை நாடவேண்டும். (பிரிவு 26-3)
- பாதிக்கப்பட்டது பெண் குழந்தையாக இருந்தால், மருத்துவ ஆய்வானது பெற்றோர் அல்லது பாதுகாவலர் முன்னிலையில் ஒரு பெண் மருத்துவரால் நடத்தப்பட வேண்டும். (பிரிவு 27-2,3)
- வழக்கு விசாரணையின்போது சிறப்பு நீதிமன்றம் அடிக்கடி இடைவெளி கொடுத்து நடத்தலாம். (பிரிவு 33-3)
- நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க பாதிக்கப்பட்ட குழந்தையை திரும்ப திரும்ப அழைக்காமல் இருப்பதை உறுதி செய்யவேண்டும். (பிரிவு 33-5)
- விசாரணையின்போது கடுமையான வினாக்கள் தொடுப்பதை அல்லது குழந்தையின் குணநலனைப் பழிப்பதை நீதிமன்றம் அனுமதிக்க கூடாது. (பிரிவு 33-6)
- வழக்கு விசாரணை தனி அறையில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும். (பிரிவு 37)


நன்றி:

**முனைவர் க. சண்முகவேலாயுதம்**

நிறுவனர்

இளங்குழந்தையின் உரிமை பேணும் நிறுவனம், (FOR YOU CHILD)

சென்னை-29



வெளியிடுவோர்:

**சிவா அறக்கட்டளை**

திருமலாபுரம், சங்கரன்கோவில் வட்டம், நெல்லை மாவட்டம்

தொலைபேசி எண் : **04636-270116**

மின்னஞ்சல் : **sivatrust.tpuram@gmail.com**

சிவா அறக்கட்டளையின் குழந்தைகள் நல தொலைபேசி எண்:

**94882 61089**



உதவி: terre des hommes stops child exploitation


# பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012

## (Protection of Children from Sexual Offences Act, 2012)




பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் கடமை அரசுக்கு உண்டு. பாலியல் தொந்தரவு மற்றும் சுரண்டலிலிருந்து சட்டவழி பாதுகாப்பு வழங்கவே 2012ம் ஆண்டில் மத்திய அரசு, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (Protection of Children from Sexual Offences Act, 2012) என்ற சட்டத்தை இயற்றியுள்ளது. இது குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறித்து இயற்றப்பட்ட முதல் சிறப்பு சட்டமாகும். இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டம் (India Penal Code) 1860ல் கற்பழிப்பு போன்ற பல்வேறு பாலியல் குற்றங்கள் வரையறை செய்யப்பட்டிருந்தாலும், தற்போதைய சட்டம் அதிலிருந்து வேறுபட்ட ஒரு சிறப்புச் சட்டமாகும். 1860ம் ஆண்டு சட்டத்திலுள்ள பல குறைபாடுகளை தீர்க்கும் வகையில் இந்த 2012ம் ஆண்டு சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2012ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இச்சட்டமானது குழந்தை என்ற சொல்லில் 18 வயதுக்கு கீழுள்ள அனைத்து ஆண், பெண் பாலரையும் உள்ளடக்குவதாக வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம், பாலியல் தாக்குதல், பாலியல் தொந்தரவு மற்றும் ஆபாசப் படப்பிடிப்பு ஆகிய குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதை பரந்த நோக்கங்களாகக் கொண்டு, அத்தகைய குற்றங்களின் விசாரணைக்கான சிறப்பு நீதிமன்றங்களை அமைக்கவும் மற்றும் அத்துடன் சம்பந்தப்பட்ட பொருட்கள் தொடர்பாகவும் இயற்றப்பட்ட ஒரு சட்டம். இச்சட்டம் குழந்தைகள் நலன்கள் குறித்த, அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் பின்வரும் சிறப்பியல்புகள் கொண்ட ஒரு குற்றவியல் சட்டமாகும்:-

1. பாலியல் தாக்குதல், பாலியல் தொந்தரவு மற்றும் ஆபாசப் படப்பிடிப்பு ஆகிய குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தலும், அத்தகைய குற்றங்களின் விசாரணைக்காக சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தலும் இதன் தலையாய நோக்கங்களாகும்.

2. பாலியல் குற்றங்களின் பல்வகை வடிவங்களாகிய உள்செலுத்து பாலியல் தாக்குதல் (Penetrative Sexual Assault), கடுமையான உள்செலுத்து பாலியல் தாக்குதல் (Aggravated Penetrative Sexual Assault), பாலியல் தாக்குதல் (Sexual Assault), பாலியல் தொந்தரவு (Sexual Harassment) மற்றும் ஆபாசப்பட நோக்கங்களுக்காக குழந்தையைப் பயன்படுத்துதல் ஆகிய முக்கிய குற்றங்கள் முதன்முறையாக துல்லியமாக இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

3. இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்கு, அதன் கடுமைக்கு ஏற்ப பலவித தண்டனைகள் கூறப்பட்டுள்ளன. அத்துடன் அபராதம் விதிக்கப்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. இச்சட்டத்தில், குழந்தையின் நம்பிக்கைக்குரியவர், பொறுப்பான அமைப்பில் உள்ளவர்கள் அல்லது காவல் துறையினர், பாதுகாப்பு படையினர் மற்றும் பொது ஊழியர் போன்றோரால் குழந்தைகளுக்கு எதிராக செய்யும் குற்றங்கள் கடுமையானதாக கருதப்படுகிறது.

5. இச்சட்டத்தின் பிரிவு 2(ஈ)ல் குழந்தை என்ற சொல் 18 வயதிற்கு கீழ்ப்பட்ட ஆண், பெண் இருபாலரையும் உள்ளடக்கி பாலின சமத்துவத்தை நிலைநாட்டுகிறது. IPC பிரிவு 90ன் கீழ் 12 வயதிற்கு கீழ் உள்ளவரால் கொடுக்கப்படும் இசைவானது உண்மையான இசைவாகாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. POCSO சட்டம் 18 வயதுவரை உள்ளவரை குழந்தையாகவே கருதுகிறது.

6. இச்சட்டத்தில் குற்ற உடந்தையும், குற்றத்தை புரிவதற்கான முயற்சியும் வரையறுக்கப்பட்டு, அவற்றிற்கான தண்டனையும் கூறப்பட்டுள்ளது (பிரிவு 16 முதல் 18 வரை).

7. இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள சில கடுமையான குற்றங்களில் மெய்ப்பிக்கும் சுமை குற்றம் சாட்டப்பட்டவரின் பேரில் சுமத்தப்பட்டுள்ளது. இது, குழந்தையின் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலை (vulnerability) மற்றும் கபடமற்ற தன்மை (innocence) ஆகியவற்றை கருத்தில்கொண்டு செய்யப்பட்டதாகும்.

8. ஒரு குழந்தைக்கு எதிராக, அது பொய்யானது என்று அறிந்தே, குழந்தையை பழிவாங்க ஒரு பொய்யான புகார் அல்லது தவறான தகவல் அளிக்கும் நபருக்கு தண்டனை அளிக்க பிரிவு 22ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஒரு குழந்தை பொய்யான புகார் அல்லது தவறான தகவல் அளித்தால், அத்தகைய குழந்தை மீது எந்த தண்டனையும் சுமத்த முடியாது. (பிரிவு 22-2)

9. குழந்தையின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய எந்த விபரத்தையும் ஊடகங்கள் சிறப்பு நீதிமன்ற அனுமதியின்றி வெளியிட பிரிவு 23ல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கான தண்டனையும் அதில் கூறப்பட்டுள்ளது.

10. விரைவான விசாரணைக்கு வழிவகுக்கும் வகையில் இச்சட்டத்தில் கூறப்பட்டு இருக்கும் குற்றங்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு விசாரணை நீதிமன்றங்கள் அமைக்க பிரிவு 28ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11. சில குற்றங்கள் குறித்தும், குற்றம் செய்யும் மனநிலை பற்றியும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக அனுமானம் மேற்கொள்ளவும் பிரிவு 29 மற்றும் 30ல் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

12. விரைவான தீர்வு காண, சாட்சியத்தை பதிவு செய்வதற்கான கால அளவு 30 நாட்கள் எனவும், விசாரணையை நிறைவு செய்ய ஓராண்டு காலம் எனவும் கால அளவு, பிரிவு 35ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. சாட்சியம் அளிக்கும் வேளையில் குற்றம் சாட்டப்பட்டவரை குழந்தை பார்த்தல் கூடாது என பிரிவு 36ல் உரைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒளிப்பட இணைப்பு வாயிலாக, குழந்தையின் வாக்குமூலத்தை பதிவுசெய்ய வசதிசெய்யப்பட்டுள்ளது.

14. பாலியல் குற்றங்கள் குறித்த வழக்குகள் தனி அறைக்குள் நடத்தப்பட வேண்டும் என பிரிவு 37 வலியுறுத்துகிறது.

15. விரும்பும் சட்ட ஆலோசகரின் உதவிபெற குழந்தைக்கு உரிமையுண்டு.

16. இச்சட்டம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஊடகங்களின் வாயிலாக விளம்பரம் அளித்தல் மற்றும் இச்சட்டத்தை செயல்படுத்தவேண்டிய அலுவலர்களுக்கு முறையான பயிற்சி அளித்தல் ஆகியவை மத்திய, மாநில அரசுகளின் கடமையாக்கப்பட்டுள்ளன. (பிரிவு 43)

17. இச்சட்டத்தின் செயல்பாடுகளை இடையறாது கண்காணிக்கும் பொறுப்பு, குழந்தைகள் உரிமை பாதுகாப்பிற்கான தேசிய மற்றும் மாநில ஆணையங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பிரிவு 44)

18. இச்சட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான விதிகளை இயற்றும் அதிகாரம் பிரிவு 45ன் கீழ் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளதால், அதன் பேரில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் விதிகள் 2012ம் ஆண்டில் இயற்றப்பட்டன.

19. இச்சட்ட விதிகளின் கீழ் உரிய இடைக்கால இழப்பீடு மற்றும் இறுதி இழப்பீடு கிடைக்கவும், அதற்கான கால அளவும் கூறப்பட்டுள்ளன.

20. குழந்தை நேய நடைமுறைகளில் குழந்தையின் நலனே தலையானது. இச்சட்டத்தில், நீதிமன்ற நடவடிக்கைகளிலும், அதற்கு முந்தைய நடவடிக்கைகளிலும் விவர அறிக்கை அளித்தல், புலன் விசாரணை மற்றும் வழக்கு விசாரணை ஆகிய முக்கிய நிலைகளில் பின்வரும் குழந்தை நேய நடைமுறைகளை கடைப்பிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன:-

- குழந்தை கூறும் விவர அறிக்கை அதன் வசிக்குமிடத்தில் அல்லது அதற்கு விருப்பமான இடத்தில் பதிவுசெய்யப்பட வேண்டும். (பிரிவு 24-1)
- அது ஒரு துணை காவல் ஆய்வாளர் படிநிலைக்கு குறையாத பெண் காவல் அலுவலரால் பதிவுசெய்யப்பட வேண்டும். (பிரிவு 24-1)
- பதிவுசெய்யும் காவல் அலுவலர் சீருடையில் இருக்கக்கூடாது. (பிரிவு 24-2)